**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**CUDDALORE DISTRICT, CUDDALORE**
**C.C.No. 81 of 2023**

அரசுதரப்பு **1** -வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனுகிரகா | வயது | :33 |
| தந்தை பெயர் | : நாராயணன் | தொழில் | : பரதநாட்டிய ஆசிரியை |
| கிராமம் | : பண்ருட்டி | ஜாதி | :-------- |
| தாலுக்கா | :பண்ருட்டி | சமயம் | : |
| மாவட்டம் | :கடலூர் | மொபைல் | :8015383822 |

Solemnly affirmed in accordance with the provisions of Act XIV of 1967 விதிமுறைகளின்படி 19.12.2025 நாளாகிய இன்று செல்வி. **R.**தனம், **B.A., B.L.,** தலைமை நீதித்துறை நடுவர், கடலூர், அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

(எதிரிகள் முன்னிலை. வழக்கறிஞர்கள் முன்னிலை இல்லை)

**முதல் விசாரணை:**

நான் பண்ருட்டியில் குடியிருக்கிறேன். பரதநாட்டிய ஆசிரியையாக உள்ளேன். ஆஜர் எதிரி தமிழ்செல்வியை தெரியும். தமிழ்செல்வியும் அவரது கணவர் மாரிமுத்துவும் சீட்டு நடத்திஞர்கள். கடந்த 2017 ம் ஆண்டிலிருந்து அவர்களிடம் ஏலச்சீட்டு கட்டினேன். 01.02.2019 லிருந்து கட்டினேன். மொத்தம் 11 சீட்டுகள் கட்டினேன். அதில் ரூ.10,00,000/- சீட்டில் ஐந்து சீட்டுகளும், ரூ.6,00,000/- சீட்டில் இரண்டும், ரூ.4,00,000/- சீட்டில் ஒன்றும், ரூ.3,00,000/- சீட்டில் ஒன்றும், ரூ.1,00,000/- சீட்டு இரண்டும் கட்டினேன். ரூ.10,00,000/- சீட்டுகளில் முதல் சீட்டு 01.02.2019 முதலும், இரண்டவது சீட்டு 01.03.2019 முதலும், மூன்றவாது சீட்டு 10.03.2019 முதலும், நான்காவது சீட்டு 15.04.2019 முதலும், ஐந்தாவது சீட்டு 10.06.2019 முதலும், மொத்தம் 20 மாதங்கள் கட்டினேன். மேற்படி சீட்டுகளில் மொத்த சந்தாதாரர்கள் ஒவ்வொரு சீட்டிலும் 20

நபர்கள். ரூ.6,00,000/- சீட்டில் முதல் சீட்டு 01.02.2019 முதலும், இரண்டாவது சீட்டு 15.03.2019 முதலும், 20 மாதங்கள் கட்டினேன். இந்த சீட்டிலும் மொத்த சந்தாதாரர்கள் ஒவ்வொரு சீட்டிற்கும் 20 நபர்கள். ரூ.4,00,000/- சீட்டை 15.03.2019 முதல் 20 மாதங்கள் கட்டினேன். இதில் மொத்த சந்தாதாரர்கள் 20 நபர்கள். ரூ.3,00,000/- சீட்டு 20.03.2019 முதல் 20 மாதங்கள் கட்டினேன். மொத்த சந்தாதாரர்கள் 20 நபர்கள். ரூ.1,00,000/- சீட்டு முதலாவது சீட்டை 20.03.2019 முதல் கட்டினேன். இரண்டாவது சீட்டை 20.07.2019 முதல் 20 மாதங்கள் கட்டினேன். ஒவ்வொரு சீட்டிலும் 20 சந்தாதாரர்கள். பதினொரு சீட்டிற்கும் மொத்தமாக ரூ.40,00,750/- கட்டினேன். எனக்கு சேர வேண்டிய தொகை ரூ.64,03,950/- மேற்கண்ட தொகைகளை எனது வங்கி கணக்கு மற்றும் எனது கணவர் வெற்றிவேல் என்பவரின் வங்கி கணக்கு மூலம் தமிழ்செல்வியின் கணவர் மாரிமுத்துவிற்கு அவரது வங்கி கணக்கு ஐசிஐசிஐ மூலம் செலுத்தினேன். என்னுடைய வங்கி கணக்கு ஐசிஐசிஐ, கரூர் வைசியா, ஸ்டேட் பேங்க் ஆகியவற்றிலிருந்து அனுப்பினேன். எனது கணவர் வங்கி கணக்கு ஸ்டேட் பேங்க் மூலம் அனுப்பினேன். ரூ.11,00,000/- மட்டும் ரொக்கமாக மாரிமுத்து மற்றும் தமிழ்செல்வியிடம் கொடுத்தேன். அதில் 20.08.2019 அன்று ரூ.1,00,000/-மும், 24.08.2019 அன்று ரூ.10,00,000/- மும் கொடுத்தேன். நான் பல்வேறு தேதிகளில் வங்கி மூலம் எதிரிக்கு கொடுத்த தொகையை என் வங்கி கணக்கு பட்டியலை பார்த்தால் கூறமுடியும். ஐசிஐசிஐ வங்கி கணக்கு எண்.218501500642 வேளச்சேரி, சென்னை. மற்ற இரண்டு வங்கியின் கணக்கு எண் தற்போது நினைவில்லை. ஸ்டேட் பேங்க் கணக்கு பண்ருட்டியில் உள்ளது. கரூர் வைசியா வங்கி கணக்கு வேளச்சேரி சென்னையில் உள்ளது. என் கணவரின் ஸ்டேட் பேங்க் வங்கி கணக்கு பண்ருட்டியில் உள்ளது. 15.04.2019 ந் தேதி அன்று கரூர் வைசியா வங்கியிலிருந்து ரூ.33,600/-, 15.05.2019 அன்று ரூ.36,550/-, 15.06.2019 அன்று ரூ.32,400/- வங்கி மூலம் செலுத்தப்பட்டுள்ளது. அதேபோல் என்னிடம் காட்டப்படும் கரூர் வைசியா வங்கி கணக்கு எண்.1265155000147112 ன் கணக்கு பட்டியல் 01.04.2019 முதல் 03.10.2020 வரை உள்ள கணக்கு விவரங்களில் குறியீடு செய்துகாட்டப்பட்டுள்ள தேதிகளில் தொகைகள் மாரிமுத்துவிற்கு வங்கி கணக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வங்கி கணக்கு பட்டியல் இணையவழி நகல் அ.சா.ஆ 1 ஆக (எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்பட்டது. அதேபோல் என்னிடம் காட்டப்படும் என்னுடைய ஐசிஐசிஐ வங்கி கணக்கு பட்டியல் 05.10.2020 முதல் 04.02.2021 வரையிலான காலங்களில் உள்ள பரிவர்த்தனையில் குறியீடு

செய்துகாட்டப்பட்டுள்ள தேதிகளில் உள்ள தொகைகள் மாரிமுத்துவின் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன். மேற்படி ஐசிஐசிஐ வங்கி கணக்கு பட்டியல் இணையவழி நகல் அ.சா.ஆ.2 ஆக (எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் என்னுடைய ஸ்டேட் பேங்க் வங்கி கணக்கு எண்.39379964284 கணக்கு பட்டியல் 05.06.2020 முதல் 30.01.2021 வரையிலான காலங்களில் உள்ள பரிவர்த்தனையில் குறியீடு செய்துகாட்டப்பட்டுள்ள தேதிகளில் உள்ள தொகைகள் மாரிமுத்துவின் வங்கி கணக்கிற்கு அனுப்பியுள்ளேன். மேற்படி ஸ்டேட் வங்கி கணக்கு பட்டியல் இணையவழி நகல் அ.சா.ஆ.3 ஆக (எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன்) குறியீடு செய்யப்பட்டது. பணம் கட்டிய பிறகு மாரிமுத்து ஒரு ஐசிஐசிஐ வங்கி காசோலை ரூ.4,91,100/-க்கு 30.03.2021 ல் கொடுத்தார். 27.06.2021 ல் மாரிமுத்து இறந்துவிட்டார். அந்த சமயம் எனக்கு மாரிமுத்து ரூ.59,12,700/- கொடுக்க வேண்டியிருந்தது. அதனுல் இரண்டாவது எதிரி தமிழ்செல்வியிடம் சென்று கேட்டேன். அப்போது இரண்டாவது எதிரி சீட்டு பற்றி தனக்கு ஒன்றும் தெரியாது என்று கூறிவிட்டார். மேற்படி தொகைகளை எனது கல்யாணத்திற்காக சீட்டு கட்டினேன். சீட்டு பணத்தை இரண்டாவது எதிரி தராததால் கடலூர் EOW போலிசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது. புகார் மனு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டது. புகார் எந்த தேதியில் கொடுத்தேன் என்று நினைவில்லை. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> -இல்லை